**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.127/2023 D.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஷேக்கபீர் | க–பெ/ த–பெ | காட்டுபா |
| ஊர்: | : | அரிமளம் | சமயம் | |
| வயது: | : | 28/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | Architech | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.08.2026**

---

<u>11.08.2026</u>

<u>குறுக்கு விசாரணை</u>

1) வழக்கு காசோலை எனது காசோலை இல்லை என்றால் சரிதான். வழக்கு என் மீதான வழக்கு இல்லை என்றால் சரிதான். தற்போதைய வழக்கை எதிர்த்து நான் வழக்காடவில்லை என்றால் சரிதான். தற்போதைய வழக்கின் எதிரி எனது தாயார் ஆவார். எனது வரவு செலவு மட்டும்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் வாங்கிய கடனை திருப்பி செலுத்தியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்காக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கடன் பெற்றேன் என்பதை எனது வருமான வரி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் நான் வருமான வரி செலுத்துவது இல்லை. எனக்கு பான் கார்டு இல்லையா என்றால் உண்டு. வருமான வரி அறிக்கை NIL statement தாக்கல் செய்துள்ளேனா என்றால் கடந்த 2 வருடம் தாக்கல் செய்யவில்லை. அதற்கு முன்பு உள்ள அறிக்கையை தாக்கல் செய்ய தயாரா உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எவ்வளவு நாட்களில் தாக்கல் செய்வேன் என்றால் 2 வாரங்களில் தாக்கல் செய்வேன். நான் கடனை திருப்பி செலுத்தியுள்ளேன் என்பதை வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் இல்லை.

2) புகார்தாரர் காசோலையை திருப்பி தராமல் ஏமாற்றினார் என்பதற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் உறவினர் என்பதால் கொடுக்கவில்லை, மற்றும் எனது தந்தை உடல்நிலை சரியில்லாமல் இறந்து விட்டார். அதன் பின்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, அதன் பின்பு அறிவிப்பு பெற்றேன், அதற்கு பதில் கொடுத்தேன். எனது தாயாரின் கணக்கில் உள்ள வரவு

செலவு தொடர்பான விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு எந்த வங்கியில் கணக்கு உள்ளது என்றால் IOB. Credit card, debit card உள்ளதா என்றால் debit card உள்ளது. Mobile Banking பயன்படுத்துவேன். எனது வங்கி கணக்கில் இருந்து நான் காசோலை பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். நான் குடும்பத்துடன் எங்கு வசிக்கிறேன் என்றால் அரிமளத்தில் வசிக்கிறேன். என் தாயார் எங்கு வசிக்கிறார் என்றால் என்னுடன்தான் உள்ளார். என் உடன்பிறந்தவர்கள் சேர்ந்துதான் வசிக்கிறோம்.

3) தற்போதைய வழக்கில் என் தாயார் சாட்சியாக வந்துள்ளாரா என்றால் இல்லை. எதற்காக சாட்சியாக வரவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் புகார்தாரரிடம் தனிப்பட்ட முறையில் கடன் பெற்றுள்ளேன் என்றாலும் அதை தற்போது வரை நான் திருப்பி செலுத்தவில்லை என்றால் சரியல்ல, ரொக்கமாக திருப்பி செலுத்தியுள்ளேன். என் தாயார் புகார்தாரரிடம் இருந்து தனிப்பட்ட முறையில் கடன் பெற்றுள்ளார் என்றாலும், அதற்காக கொடுக்கப்பட்ட காசோலைதான் வழக்கு காசோலை என்றாலும், சரியல்ல. ஒரே கடன்தான். காசோலை வங்கியில் செலுத்திய தேதியில் என் தாயார் வங்கி கணக்கில் எவ்வளவு தொகை இருந்தது என்று என்னால் கூற இயலாது என்றால் சரிதான். நான் புகார்தாரரிடம் கடன் பெற்று மோசடி செய்துள்ளேன் மற்றும் என் தாயார் போதிய பணம் வங்கியில் வைக்காமல் புகார்தாரரை மோசடி செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. மோசடி செய்வதற்காகதான் stop payment வலியுறுத்தப்பட்டது என்றால் சரியல்ல. காசோலை தந்துவிடுவதாக கூறினார், தாமதம் ஏற்பட்டதால் stop payment வலியுறுத்தினோம். என் தாயார் மோசடி செய்தார் என்றாலும், அதற்கு நான் உடந்தையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி காசோலை மோசடி செய்துள்ளார் என்றாலும், மற்றும் மாற்றுமுறை சட்டத்தின் படி எதிரி தண்டிக்கப்படவேண்டியவர் என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.08.11 18:38:52 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,காரைக்குடி.